**ஜூலை – 20**

# TNPSC துளிகள்

- மண்டோவி ஆற்றின் குறுக்கே சோராவ்-ரிபந்தர் பாதையில், கங்கோத்ரி மற்றும் துவாரகா ஆகிய இரண்டு புதிய படகுகளுடன் இந்தியாவின் முதல் Roll on-Roll off வகை இழுவைப் (RoRo) படகு சேவையை கோவா அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியா 2030 ஆம் ஆண்டிற்குள் அதன் முதல் புல்லட் இரயில் வழித்தடத்திற்கான ஜப்பானின் சமீபத்திய E10 தொடர் ஷின்கான்சென் இரயில்களை வாங்க உள்ளது.
  - ஷாங்காய் மாக்லேவ் ஆனது உலகின் முதல் வணிக அதிவேக காந்த இழுவை (மேக்லேவ்) இரயில் ஆகும் என்பதோடு இது மணிக்கு 300 கிலோ மீட்டர் (186 மைல்) வேகம வரை செல்லக் கூடியது.
- எச்.ஐ.வி பாதிப்பு தடுப்பிற்கான புதிய பாதிப்புத் தடுப்பு (PrEP) விருப்பத் தேர்வாக, ஊசி மூலம் செலுத்தக்கூடிய லெனகாபாவிர் (LEN) தடுப்பு மருந்தினை ஆண்டிற்கு இரண்டு முறை செலுத்த WHO பரிந்துரைத்துள்ளது.
  - இந்த முக்கிய வழிகாட்டுதலானது ருவாண்டாவின் கிகாலியில் நடைபெற்ற 13வது சர்வதேச எய்ட்ஸ் சங்கத்தின் (IAS) எச்.ஐ.வி அறிவியல் மாநாட்டில் அறிவிக்கப் பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் தியாகிகள் தினம் 2025



- தமிழ்நாட்டில், 2025 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 25 ஆம் தேதியன்று, தியாகிகள் தினம் ஆனது "தமிழ் மொழித் தியாகிகள் நாள்" ஆகக் கொண்டாடப்பட உள்ளது.
- கூடுதலாக, தமிழ்நாட்டில் ஜூலை 17 ஆம் தேதியும் தியாகிகள் தினமாக கொண்டாடப் படுகிறது.
- இத்தினமானது, தமிழ் இயக்கத்தின் முக்கியப் பிரமுகர்களான தியாகி ஆர்யா, தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி செண்பகராமன் ஆகியோரின் தியாகங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- மேலும், M.K. காந்தி அவர்களின் நினைவு தினத்தை நினைவு கூரும் வகையில் ஜனவரி 30 ஆம் தேதியன்று இந்தியா முழுவதும் தியாகிகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## ஆலங்குடி மருத்துவமனை - NQAS மற்றும் காயகல்ப் சான்றிதழ்

- புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு 2025-26 ஆம் ஆண்டிற்கான தேசியத் தர உறுதி தரநிலைகள் (NQAS) மற்றும் காயகல்ப் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.
- தேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் 2013 ஆம் ஆண்டில் NQAS நிறுவப் பட்டது.
- அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களில் தரமான சுகாதார சேவைகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வெளிப்புற சுகாதாரப் பராமரிப்புத் தரத்திற்கானச் சங்கத்தில் தரநிலைகளுக்கானத் தேசியச் சங்கத்தினால் தரநிலைகள் சரிபார்க்கப்படுகின்றன.
- காயகல்ப் என்பது மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் ஒரு தேசிய முன்னெடுப்பாகும்.
- இது பொது சுகாதார வசதிகளில் தூய்மை, சுகாதாரம் மற்றும் நோய்த் தொற்றுக் கட்டுப்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முறையே மருத்துவ மற்றும் கிராமப்புறச் சுகாதாரச் சேவைகள் இயக்குநரகம் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் மூலம் தமிழ்நாட்டில் உள்ள இரண்டாம் நிலை மற்றும் முதன்மை நிலை பராமரிப்பு மையங்களில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.




# தேசியச் செய்திகள்

## மச்சிலிப்பட்டினம் கிரீன்பீல்டு துறைமுகம்


- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள மச்சிலிப்பட்டினம் கிரீன்பீல்டு (முழுவதும் புதிய) துறைமுகத்தின் கட்டுமானப் பணிகளில் சுமார் 48% பணிகள் நிறைவடைந்துள்ளதையடுத்து, 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அதன் செயல்பாடுகள் தொடங்கப்படலாம்.
- மச்சிலிப் பட்டினம் (மசூலிப்பட்டினம்) ஆனது சாதவாகனர் காலத்திலிருந்து ஒரு மிகவும் முக்கியத் துறைமுக நகரமாக இருந்து வருகிறது மற்றும் கோல்கொண்டா சுல்தான்களின் கீழ் செழித்து வளர்ந்தது.
- 17 ஆம் நூற்றாண்டில் டச்சு, ஆங்கிலேயர் மற்றும் பிரெஞ்சு வர்த்தக மையங்களுடன்,

ஒரு காலத்தில் மஸ்லின் மற்றும் ஜவுளிக்கான உலகளாவிய வர்த்தக மையமாக இது விளங்கியது.

- இது ஏற்றுமதி மற்றும் இறக்குமதியை (நிலக்கரி, சிமெண்ட், மருந்துப் பொருட்கள், உரங்கள், கொள்கலன்கள்) அதிகரிக்கும் மற்றும் தெலுங்கானாவில் முன்மொழியப் பட்டுள்ள உலர் துறைமுகம் வழியாக உள்நாட்டை இணைக்கும்.




## பிரதான் மந்திரி தன்-தான்யா கிருஷி யோஜனா (PM-DDKY)




- 2025 முதல் 2031 ஆம் ஆண்டு வரை 100 வேளாண் மாவட்டங்களை இலக்காகக் கொண்ட பிரதான் மந்திரி தன்-தான்யா கிருஷி யோஜனா (PM-DDKY) என்ற திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- குறைந்த செயல்திறன் கொண்ட பகுதிகளில் உற்பத்தித் திறன், நீர்ப் பாசனம், சேமிப்பு மற்றும் கடன் வழங்குதல் ஆகியவற்றை நன்கு அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட, இந்தத் திட்டத்திற்காக 6 ஆண்டுகளுக்கு 24,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

- இது உயர் இலட்சிய மிக்க மாவட்டங்களின் திட்ட மாதிரியைப் பின்பற்றுகிறது மற்றும் மாநில, மாவட்ட மற்றும் தனியார் கூட்டாண்மை மூலம் 11 அமைச்சகங்களில் 36 திட்டங்களை ஒருங்கிணைக்கிறது.
- மாவட்டங்கள் சார்ந்த குறிப்பிட்ட வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய திட்டங்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான DDKY சமிதியின் கீழ் உருவாக்கப் படும்.
- நிதி ஆயோக் அமைப்பின் உத்தி சார் வழிகாட்டுதலை வழங்குவதுடன், ஒரு மையக் கட்டுப்பாட்டு கண்காணிப்பு அமைப்பு வழியாக 117 செயல்திறன் குறிகாட்டிகளைப் பயன்படுத்தி இதன் முன்னேற்றம் கண்காணிக்கப் படும்.

## இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மின்சாரத் திறன் 2025

A. Installed Electricity Capacity by Source as on 30.06.2025 (RE + Large Hydro Combined)


| Sector | Capacity (in GW) | Percentage |
|---|---|---|
| Thermal | 242.04 GW | (49.92%) |
| Nuclear | 8.78 GW | (1.81%) |
| RE (including Large Hydro) | 234.00 GW | (48.27%) |
| **Total** | **484.82 GW** | **(100%)** |

- இந்தியா அதன் நிறுவப்பட்ட மின்சாரத் திறனில் சுமார் 50 சதவீதத்தினைப் புதைபடிவ எரிபொருள் சாராத மூலங்களிலிருந்து உற்பத்தி செய்துள்ளது.
- இது தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்டப் பங்களிப்புகளில் (NDCs) நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட ஐந்து ஆண்டுகள் முன்னதாக இருந்தது.
- ஜூன் 30 ஆம் தேதி நிலவரப் படி, இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மின்சாரத் திறன் 484.82 GW ஆகும்.
- இது வெப்ப ஆற்றல் மூலங்களிலிருந்து 242.04 GW (49.9%) மற்றும் புதைபடிவம் சாரா மூலங்களிலிருந்து 242.78 GW (50.1%) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பெரும் நீர் ஆற்றல் மற்றும் அணுசக்தி ஆகியவற்றை உள்ளடக்கியது.
- 2021 ஆம் ஆண்டு ஐக்கியப் பேரரசின் ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்ற COP26 பருவநிலை மாநாட்டில், இந்தியா அதன் NDC இலக்குகளின் கீழ், 2030 ஆம் ஆண்டிற்குள் புதைபடிவம் சாரா எரிபொருள் வளங்களிலிருந்து அதன் ஒட்டுமொத்த மின்சாரத் திறனில் 50% இலக்கினை அடையும் நோக்கினை அறிவித்தது.
- 500 ஜிகாவாட் (GW) அளவிலான புதைபடிவம் சாரா மின்சாரத் திறனை நிறுவுதல், திட்டமிடப்பட்ட கார்பன் உமிழ்வை ஒரு பில்லியன் டன்கள் குறைத்தல் மற்றும் 2030 ஆம் ஆண்டில் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உமிழ்வுச் செறிவினை 45% குறைத்தல் ஆகியவை பிற இலக்குகளாகும்.
- உலகளவில் மிகக் குறைந்த தனிநபர் உமிழ்வுகளில் ஒன்றாக இருந்த போதிலும், தங்கள் NDC உறுதிமொழிகளை நிறைவேற்றும் - அல்லது அதை விட அதிகமாக வழங்கும் சில G20 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- இந்தியா 2025 ஆம் ஆண்டில் அதன் புதிய மற்றும் மிகவும் இலட்சிய நோக்கமிக்க NDC இலக்கினை சமர்ப்பிக்க உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## கொசுக்கள் மற்றும் உண்ணிகளால் பரவும் வைரஸ் நோய்களுக்கான வழி காட்டுதல்கள்

- டெங்கு, சிக்குன்குனியா, ஜிகா மற்றும் மஞ்சள் காய்ச்சல் போன்ற ஆர்போவைரல் /கொசுக்கள் மற்றும் உண்ணிகளால் பரவும் வைரஸ் நோய்களுக்கு சிகிச்சையளிக்கச் செய்வதற்கான முதல் உலகளாவிய வழிகாட்டுதல்களை உலக சுகாதார அமைப்பு (WHO) வெளியிட்டுள்ளது.
- பருவநிலை மாற்றம், உலகளாவியப் பெரும் பயணம் மற்றும் பலவீனமான சுகாதார அமைப்புகள் காரணமாக கொசுக்களால் பரவும் இந்த நோய்கள் வேகமாக அதிகரித்து வருகின்றன.
- 5.6 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் பெரும்பாலும் காய்ச்சல், சொறி மற்றும் மூட்டு வலியுடன் தொடங்குகின்ற இந்த ஆர்போவைரல் வகை வைரஸ் நோய்களைப் பெறும் அபாயத்தில் உள்ளனர்.
- இந்தப் புதிய வழிகாட்டுதல்கள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நோயாளிகளின் லேசான மற்றும் கடுமையான ஆர்போவைரல் வைரஸ் நோய்களுக்கு என்று மிகவும் பாதுகாப்பாகவும், சரியான முறையில் சிகிச்சையளிக்கவும் உதவுகின்றன.
- இந்தத் தெளிவான வழிமுறைகள் குறிப்பாகச் சுகாதார வளங்கள் குறைவாக உள்ள இடங்களில் உயிரிழப்பு மற்றும் சிக்கல்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளன.





## தெற்காசியாவின் தடுப்பூசி வழங்கீட்டுப் பரவல்

- உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் ஐ.நா குழந்தைகள் நிதியத்தின் (UNICEF) தரவுகளின் படி, தெற்காசியா 2024 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கான அதிகபட்சத் தடுப்பூசி வழங்கீட்டினை எட்டியது.
- இந்தியாவில் எந்த தடுப்பூசியும் பெறாத குழந்தைகளின் எண்ணிக்கையில் 43% சரிவுப் பதிவானது என்பதோடு 2023 ஆம் ஆண்டில் 1.6 மில்லியனாக இருந்த இது 2024 ஆம் ஆண்டில் 0.9 மில்லியனாகக் குறைந்தது.
- சுமார் 23,000 என்ற எண்ணிக்கையிலிருந்து இது 11,000 ஆகக் குறைந்துள்ளதுடன் எந்த தடுப்பூசியும் பெறாத குழந்தைகளின் எண்ணிக்கையில் நேபாளம் 52% இலக்கினை எட்டியுள்ளது.
- தொண்டை அழற்சி நோய், தசை இழுப்பு வாதம் மற்றும் கக்குவான் இருமல் (DTP3) தடுப்பூசியின் மூன்றாவது தவணைக்கு பாகிஸ்தானில் இது வரை இல்லாத அளவிற்கு அதிகபட்சமாக 87% என்ற அதிகபட்ச தடுப்பூசி வழங்கீடு பதிவாகியுள்ளது.
- ஆப்கானிஸ்தானின் தடுப்பூசிப் பரவலானது 1 சதவீதப் புள்ளி குறைந்து, இப்பகுதியில்

மிகக் குறைவான அளவிலானதாக பதிவாகியுள்ளது.


- 2024 ஆம் ஆண்டில், தெற்காசியாவில் சுமார் 92% குழந்தைகள் மூன்றாவது தவணை DTP தடுப்பூசியைப் பெற்றனர் என்பதோடு இது 2023 ஆம் ஆண்டை விட 2 புள்ளிகள் அதிகமாகும் என்ற நிலையில் இதில் முதல் தவணை வழங்கீட்டின் பரவலானது 93 சதவீதத்திலிருந்து 95% ஆக உயர்ந்தது.
- இந்தப் பகுதியில் எந்த தடுப்பூசியும் பெறாத குழந்தைகள் 2.5 மில்லியனிலிருந்து 1.8 மில்லியனாகக் குறைந்து 27% ஆக உள்ளது.
- இளம் பருவப் பெண்களுக்கான மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி வழங்கீட்டுப் பரவல் 2023 ஆம் ஆண்டில் இருந்த 2 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 9% ஆக அதிகரித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் HPV தடுப்பூசி வழங்கலைத் தொடங்கியதிலிருந்து வங்காள தேசத்தில் 7.1 மில்லியனுக்கும் அதிகமான சிறுமிகளுக்கு தடுப்பூசி போட்டுள்ளது.
- நேபாளத்தில் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அதன் தேசிய HPV தடுப்பூசி வழங்கல் பிரச்சாரத்தைத் தொடங்கியது, இதன் மூலம் 1.4 மில்லியனுக்கும் அதிகமான சிறுமிகளுக்கு தடுப்பூசி போட்டது.
- இந்தியாவும், பாகிஸ்தானும் 2025 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் HPV தடுப்பூசி வழங்கல் திட்டங்களைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளன.
- முன்னேற்றங்கள் இருந்த போதிலும், தெற்காசியாவில் 2.9 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் தடுப்பூசி போடப்படாமல் அல்லது பரிந்துரைக்கப்பட்ட அனைத்துத் தடுப்பூசிகளையும் பெறாமல் உள்ளனர்.




## மிகப்பெரிய புலம்பெயர்வு - மேற்குக் கரை

- ஐ.நா. தரவுகளின்படி, 1967 ஆம் ஆண்டில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு தொடங்கியதில் இருந்து வெஸ்ட் பேங்/ மேற்குக் கரை பகுதியானது அதன் மிகப்பெரிய புலம்பெயர்வை எதிர்கொண்டு வருகிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கப்பட்ட இஸ்ரேலிய நாட்டு இராணுவ நடவடிக்கையின் காரணமாக ஆயிரக்கணக்கான வீடுகள் இடிக்கப்பட்டதுடன், சுமார் 30,000 பாலஸ்தீனியர்களை அது வெளியேறக் கட்டாயப்படுத்தியது.
- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற ஹமாஸ் தாக்குதலில் சுமார் 1,000 பாலஸ்தீனியர்களும், 50க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களும் இப்பகுதியில் கொல்லப் பட்டதுடன் அதன் பிறகு வன்முறை அதிகரித்துள்ளது.
- குடியேறியவர்களின் மீதான தாக்குதல்களும் அதிகரித்துள்ளன, இதனால் காயங்கள்

மற்றும் அதிகப் புலம்பெயர்வுகளும் ஏற்பட்டுள்ளன.




# பொருளாதாரச் செய்திகள்

## காலாண்டு வர்த்தக கண்காணிப்பு அறிக்கையின் Q3 பதிப்பு- 2025





- நிதி ஆயோக் அமைப்பானது, புது டெல்லியில் காலாண்டு வர்த்தகக் கண்காணிப்பு அறிக்கையின் மூன்றாவது பதிப்பைத் வெளியிட்டுள்ளது என்ற நிலையில் இது 2024–25 ஆம் நிதியாண்டின் 3வது காலாண்டை (2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை) உள்ளடக்கியது.
- இந்தியாவின் சரக்கு ஏற்றுமதியானது சுமார் 3% அதிகரித்து 108.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும், இறக்குமதியானது சுமார் 6.5% அதிகரித்து 187.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் உள்ளது.
- சேவைகளின் ஏற்றுமதி 17% அதிகரித்து, 52.3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சேவை உபரிக்குப் பங்களித்தது, இது வர்த்தகப் பற்றாக்குறையை ஈடுகட்ட உதவியது.
- எண்ணிம முறையில் வழங்கப்படும் சேவைகளின் (DDS) ஏற்றுமதிகள் 2024 ஆம் ஆண்டில் 269 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியதுடன் இந்தப் பிரிவில் இந்தியா உலகளவில் ஐந்தாவது இடத்தைப் பிடித்தது.
- மின்சார இயந்திரங்கள் மற்றும் ஆயுதங்கள் போன்ற மிக அதி உயர் தொழில்நுட்பப்

பொருட்களின் ஏற்றுமதியானது 2014 ஆம் ஆண்டு முதல் 10.6% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளர்ந்துள்ளது.

- விமானம், விண்கலம் மற்றும் அது தொடர்புடைய பாகங்கள் ஆண்டிற்கு சுமார் 200 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியுடன் முதல் பத்து ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் இடம் பிடித்துள்ளன.

### ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தில் மேலும் 13 இந்திய வங்கிகள்

- சர்வதேசப் பரிவர்த்தனைகளுக்கான இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகம் (NPCI) ஆனது பணம் அனுப்புவதை எளிதாக்குவதற்காக UPI-PayNow இணைப்பில் மேலும் 13 வங்கிகளைச் சேர்க்கிறது.
- NPCI சர்வதேசப் பண வழங்கீட்டு கழக லிமிடெட் (NIPL) என்பது இந்தியத் தேசியக் கொடுப்பனவு கழகத்தின் (NPCI) சர்வதேசப் பிரிவாகும்.
- இது இந்தியாவிற்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான அதன் வரம்பை விரிவுபடுத்தி பன்னாட்டுப் பணப் பரிமாற்றங்களை எளிதாக்குகிறது.
- இது தனிநபர்களிடையேயான நிகழ்நேர பன்னாட்டு நிதிப் பரிமாற்றங்களை மிகவும் எளிதாக்குகிறது.
- தற்போது, இந்தியப் பயனர்கள் UPI அடையாள முகவரி மூலம் பணம் பெறலாம் மற்றும் சிங்கப்பூரில் உள்ள பயனர்களுக்கு அவர்களின் கைபேசி எண் அல்லது மெய்நிகர் கட்டண முகவரி (VPAs) மூலம் பணம் அனுப்பலாம்.
- UPI-PayNow சேவையானது இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் சிங்கப்பூர் நாணய ஆணையம் (MAS) இடையேயான கூட்டு முன்னெடுப்பாகத் தொடங்கப்பட்டது.
- இந்தியாவிற்கு பணம் அனுப்புவதற்கான மிகவும் விரிவாக்கப்பட்ட வலையமைப்பில் தற்போது 19 வங்கிகள் உள்ளன.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


### சூப்பர் எர்த் - TOI-1846 b

- பூமியிலிருந்து 154 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள TOI-1846 b என்ற புதிய கிரகத்தை நாசா கண்டறிந்துள்ளது.
- இந்தக் கிரகம் ஆனது பூமியை விட இரண்டு மடங்கு பெரியது மற்றும் நான்கு மடங்கு கனமானது.
- இது சிறிய பாறை கிரகங்களுக்கும் பெரிய வாயு கோளத்திற்கும் இடையிலான "radius gap" என்று அழைக்கப்படும் ஓர் அரிய குழுவில் உள்ளது.

- TOI-1846 b ஆனது லைரா விண்மீன் தொகுப்பில் ஒரு செந்நிறக் குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது மற்றும் நான்கு நாட்களுக்குள் அதன் முழு சுற்றுப்பாதையையும் சுற்றி முடிக்கிறது.
- இந்தக் கிரகம் ஆனது பனி அடுக்கு அல்லது ஆழமற்ற கடலுடன் கூடிய மெல்லிய வளி மண்டலத்தைக் கொண்டிருந்தாலும், தீவிர வெப்பம் காரணமாக இங்கு உயிர்கள் வாழ சாத்தியமில்லை.




## குவாண்டம் மாறுபாடுகள்




- இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் (RRI) அறிவியல் ஆய்வாளர்கள் குவாண்டம் மாறுபாடுகளைக் கண்டறிந்துள்ளனர்.
- இது சில குவாண்டம் அமைப்புகளில் பெரும் சிக்கலை உருவாக்கி மீண்டும் அதனைத் தோற்றுவிக்கிறது.
- உலகளாவிய இடையூறுகள் /மாறுபாடு மாதிரியைப் பயன்படுத்தி, அறிவியல் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் வீச்சுத் தணிப்பு (ஆற்றல் இழப்பை தூண்டக்கூடிய ஒரு வகை இடையூறு) சரியான சூழல்களின் கீழ் சிக்கல்களை அழிக்க மட்டுமல்லாமல் அவற்றை

உருவாக்கவும் செய்கிறது என்பதை நிரூபித்தனர்.

- இந்தக் கண்டுபிடிப்புகள் குவாண்டம் தொடர்பு மற்றும் கணினிமயமாக்கலை நன்கு மேம்படுத்தக் கூடும்.

## சைபோர்க் தேனீக்கள்

- சீன அறிவியலாளர்கள் உண்மையான தேனீக்களை மிகவும் சாத்தியமான இராணுவப் பயன்பாட்டிற்காக சைபோர்க் தேனீக்களாக மாற்றுவதற்காக வேண்டி உலகின் மிக இலகுவான மூளைக் கட்டுப்படுத்தியை (74 மி.கி) உருவாக்கியுள்ளனர்.
- சிறிய சாதனம் ஒன்று தேனீயின் முதுகில் பொருத்தப்பட்டு அதன் மூளையைத் துளைத்து அதன் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகை மின்னணு சமிக்ஞைகளை அனுப்புகிறது.
- மூளைக் கட்டுப்படுத்திகள் என்பது பூச்சி இனங்களைச் சார்ந்தது அதாவது மறு வடிவமைப்பு இல்லாமல் அதே சாதனமானது வெவ்வேறு பூச்சிகளில் செயல்படாது.




## மிகப்பெரிய கருந்துளை இணைவு

- ஈர்ப்பு அலை கண்டுணர் கருவிகளைப் பயன்படுத்தி இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகப் பெரிய கருந்துளை இணைவினை அறிவியலாளர்கள் கண்டறிந்தனர்.
- ஒன்றுக்கொன்று மோதுகின்ற இந்தக் கருந்துளைகளானது சூரியனின் நிறையை விட 103 மற்றும் 137 மடங்கு பெரிது ஆகும்.
- அவை ஒன்றிணைந்து சூரியனின் நிறையை விட 265 மடங்கு பெரிய ஒற்றை கருந் துளையை உருவாக்கியது.
- இந்த நிகழ்வானது பூமியிலிருந்து சுமார் 10 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் நிகழ்ந்தது மற்றும் LIGO ஆய்வகத்தினால் மிகவும் கண்டறியப்பட்ட விண்வெளி-நேர அலைகளை ஏற்படுத்தியது.
- இந்தக் கருந்துளைகள் பூமியை விட சுமார் 400,000 மடங்கு வேகமாக சுழன்று கொண்டு இருந்தன.
- இந்தக் கருந்துளைகள் ஆனது முந்தைய கருந்துளை இணைவுகளிலிருந்து உருவாகி இருக்கலாம் என்று அறிவியலாளர்கள் நம்புகின்றனர், இது அவற்றின் அதிக நிறை மற்றும் விரைவான சுழற்சியை விளக்குகிறது.
- இதுவரையில், சுமார் 300 கருந்துளை இணைவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன; ஆனால் இந்த இணைவு தான் மிகப் பெரியது மற்றும் மிகவும் சிக்கலானது.




## இஸ்ரேலின் டிரார்-1




- இஸ்ரேல் நாடானது அரசாங்க நிதியுதவியுடன் உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட டிரார்-1 எனப்படுகின்ற தனது முதல் முழுமையானத் தகவல் தொடர்பு செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியது.
- இது புவியின் நிலநடுக்கோட்டிலிருந்து 36,000 கிலோ மீட்டர் உயரத்தில் நிலைநிறுத்தப் பட்ட ஒரு புவிசார்/புவிநிலை செயற்கைக்கோள் ஆகும்.
- டிரார்-1 ஆனது 15 ஆண்டுகளுக்கு தேசியத் தகவல் தொடர்பு தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- புவிசார் தகவல் பரிமாற்றச் சுற்றுப் பாதையை அடைந்த பிறகு, அந்த செயற்கைக் கோள் அதனை இறுதி சுற்றுப் பாதையில் நன்கு நிலைநிறுத்த உள் உந்துவிசையைப் பயன்படுத்தும், இது இஸ்ரேல் மற்றும் அதன் அருகிலுள்ளப் பகுதிகள் மீதான தகவல் தொடர்புகளைப் பேணும்.

## நியூராலிங் நிறுவனத்தின் குரல் மீளுருவாக்கம்

- கடுமையான பேச்சுக் குறைபாடுகள் உள்ள நபர்களுக்கான தகவல்தொடர்புகளை மீளுருவாக்கம் செய்யும் ஒரு நுட்பத்தில் நியூராலிங்க் நிறுவனம் முன்னேற்றம் கண்டு உள்ளது.
- சமீபத்தில், அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) ஆனது அதன் மிகவும் புதுமையான மூளையில் சில்லு பொருத்துதல் தொழில்நுட்பத்திற்காக வேண்டி அந்த நிறுவனத்திற்கு ஒரு சாதன அங்கீகாரத்தினை வழங்கியது.
- உயிருக்கு ஆபத்தானப் பாதிப்புகளுக்கு மிகவும் பயனுள்ள ஒரு சிகிச்சையை உறுதி அளிக்கும் மருத்துவச் சாதனங்களுக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்படுகிறது.
- இந்த சாதனமானது, மூளைத் தண்டு முடக்குவாதம் (ALS), பக்கவாதம், முதுகுத் தண்டு காயம், பெருமூளை வாதம், தண்டு வட மரப்பு நோய் மற்றும் இதர பிற நரம்பியல் பாதிப்புகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும்.
- நியூராலிங்க் என்பது எலோன் மஸ்க் நிறுவிய ஒரு நரம்பியல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகும்.





## பிளேசர் B.L. லேசெர்டேயின் X-கதிர் உமிழ்வுகள்


- பிளேசர் B.L. லேசெர்டே (சிற்றலை விண்மீன்) பூமியை நோக்கி செலுத்தப்படும் அதன் செறிவு மிக்க பாய்வுகளுக்குப் பெயர் பெற்றது.
- தீவிரமான சூழல்களில் X-கதிர் உமிழ்வினை மிகவும் புரிந்து கொள்வதற்கான மையப் புள்ளியாக இது மாறியுள்ளது.
- இந்த ஆய்வில், நாசாவின் ஆய்வு ஊடுகதிர் முனைவாக்க மானி ஆய்வுக் கருவி (IXPE) முக்கியப் பங்கு வகித்தது.
- பிளேசர் பாய்வுகளில் ஊடுகதிர் உருவாக்கத்தின் பின்னணியில் உள்ள பல்வேறு வழி முறைகளை வெளிக்கொணர்வதற்கு நிலக் கட்டுப்பாடு அடிப்படையிலான தொலை நோக்கிகளுடன் இது ஒருங்கிணைக்கப்பட்டது.
- சிற்றலை விண்மீன்கள்/பிளேசர்கள் ஒரு வகையான செயலில் உள்ள அண்ட மையம்

ஆகும்.

- அவை அவற்றின் மையங்களில் மிகப்பெரிய கருந்துளைகளை கொண்டுள்ளன.
- இந்தக் கருந்துளைகள் ஒளியின் வேகத்திற்கு அருகிலான அளவில் நகரும் துகள்களின் பாய்வுகளை வெளியிடுகின்றன.
- B.L. லேசெர்டே என்பது இந்தக் கண்டுபிடிக்கப்பட்ட முதல் சிற்றலை விண்மீன்களில் ஒன்றாகும் என்பதோடு மேலும் இது லேசெர்டா விண்மீன் தொகுப்பில் அமைந்துள்ளது.
- ஒரு தீவிர ஈர்ப்பு விசைப் புலங்களில் பருப்பொருள் மற்றும் ஆற்றலின் நடத்தையைப் புரிந்து கொள்வதற்கு இதன் ஆய்வு மிக முக்கியமானதாகும்.





## HAYSTAC பரிசோதனை 2025




- HAYSTAC (Haloscope at Yale Sensitive to Axion Cold Dark Matter) சோதனை என்பது ஆக்சியான்களை கண்டறிவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முன்னணி ஆராய்ச்சி முன்னெடுப்பாகும்.
- இந்த கருதுகோள் துகள்கள் ஆனது கரும்பொருளுக்கு நம்பிக்கைக்குரிய சாத்தியக் கூறாக கருதப்படுகின்றன.

- உணர்திறனை மேம்படுத்துவதற்காக என புதுமையான நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்சியான்களுக்கான மிக விரிவான தேடலை HAYSTAC வழங்கியுள்ளது.
- ஆக்சியான்கள் என்பது துகள் இயற்பியலில் மிக வலுவான CP சிக்கல் எனப்படும் ஒரு பெரிய முரண்பாட்டைத் தீர்க்க முன்மொழியப்பட்ட ஒரு கருதுகோள்தான் அடிப்படை துகள்கள் ஆகும்.
- அவை நடுநிலையானவை (மின்னூட்டம் இல்லை) மற்றும் அவை மிகச் சிறிய நிறை கொண்டவை என்று நம்பப்படுகிறது.
- CP சமச்சீர் என்பது "C (மின்னூட்டம்): துகள்களை அவற்றின் எதிர் துகள்கள் கொண்டு மாற்றுதல்" மற்றும் "P (சமநிலை): இடஞ்சார்ந்த ஆயத் தொலைவுகளை மாற்றுதல் (கண்ணாடிப் படம் போல)" ஆகியவற்றின் ஒருங்கிணைந்த மாற்றத்தைக் குறிக்கிறது.

## செயலில் உள்ள அண்ட உட்கரு





- வானியல் வல்லுநர்கள் தங்கள் முழு வான ஊடுகதிர் ஆய்வுகளின் போது 11 புதிய செயலில் உள்ள அண்ட உட்கருவங்களைக் (AGNs) கண்டறிந்துள்ளனர்.
- அதற்காக, அவர்கள் ஸ்பெக்ட்ர்- RG (SRG) விண்வெளி ஆய்வகத்தைப் பயன்படுத்தினர்.
- செயலில் உள்ள அண்ட உட்கரு (AGNs) என்பது அண்டங்களின் மையங்களில் உள்ள சிறிய பகுதிகள் ஆகும்.
- இது விதிவிலக்காக பெரும்பாலும் மற்ற அண்டங்களை விட மிகவும் அதிகமாக நன்கு பிரகாசிக்கின்ற, அதிக அளவிலான மின்காந்த கதிர்வீச்சை வெளியிடுகிறது.
- இந்த செறிவுமிக்க உமிழ்வு ஆனது ஒரு மாபெரும் கருந்துளை அல்லது தீவிர நட்சத்திர உருவாக்கச் செயல்பாட்டால் பருப்பொருள் குவிவதால் எழுகிறது.
- AGN ஆனது பேரண்டத்தில் மிகவும் நன்கு ஒளிர்கின்ற மற்றும் ஒரு நிலையான ஆற்றல் மூலங்களில் ஒன்றாகும் என்பதோடு மேலும் அவை அண்ட உருவாக்கம் மற்றும் பரிணாம வளர்ச்சியைப் புரிந்து கொள்வதில் முக்கியமானவையாகும்.


## அமினோ குழு ஏற்றப்பட்ட கிராஃபீன் மீநிலை மின் தேக்கி

- நாகாலாந்து பல்கலைக்கழக அறிவியலாளர்கள் மிக வேகமாக மின்னேற்றம் செய்யும் மற்றும் நீண்ட காலம் நீடிக்கும் மீநிலை மின் தேக்கியை உருவாக்கி வருகின்றனர்.
- இது வழக்கமான லித்தியம்-அயனி மின்கலன்களை விட சிறப்பாக செயல்படுகிறது.
- மீநிலை மின் தேக்கிகள் என்பது வழக்கமான மின்தேக்கிகள் மற்றும் சாதாரணமான மின் கலன்களுக்கு இடையிலான ஒரு இடைவெளியைக் குறைக்கும் ஆற்றல் சேமிப்பு சாதனங்கள் ஆகும்.

- ஆக்சிஜன் குழு குறைக்கப்பட்ட கிராஃபீன் ஆக்சைடிலிருந்துப் பெறப்பட்ட அமினோ குழு ஏற்றப் பட்ட கிராஃபீனில் இந்த ஆராய்ச்சி கவனம் செலுத்துகிறது.
- இந்தப் பொருள் ஆனது சாதாரண கிராஃபைட்டை அதி உயர் செயல்திறன் கொண்ட அமினோ குழு ஏற்றப் பட்ட கிராஃபீனாக மாற்றும் ஒரு நெறிப்படுத்தப்பட்ட, ஒற்றை படி செயல்முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப் படுகிறது.




## ஆக்ஸிஜன் மின்னாற்பகுப்பு திறன்





- முக்கியமான ஆக்ஸிஜன் தொடர்பான வினையூக்க எதிர்வினைகளை வேகமாகவும், மலிவு விலையிலும், திறன் மிக்க முறையிலும் மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய வினையூக்கியை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- அவர்கள் பெங்களூருவின் நுண் மற்றும் மென்மையான பொருள் அறிவியல் மையத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- இது ஆக்ஸிஜன் தொடர்பான மின்னாற்பகுப்பு எதிர்வினைகளை மேம்படுத்துகிறது.
- இந்த வினையூக்கி தூய்மையான ஆற்றல் தொழில்நுட்பங்களின் செயல்திறன் மற்றும் மலிவு விலையிலான தன்மையினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வழக்கமான வினையூக்கிகள் பெரும்பாலும் விலையுயர்ந்த மற்றும் விலைமதிப்பற்ற

சில உலோகங்களைச் சார்ந்துள்ளன என்பதோடு அவை செலவு மற்றும் செயல்திறன் சவால்களை ஏற்படுத்துகின்றன.

- ❖ இரும்பு இணைவு கொண்ட நிக்கல் செலினைடைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட புதிய வினையூக்கியானது, இந்த சிக்கல்களை திறம்பட நிவர்த்தி செய்வதாக உறுதி அளிக்கிறது.
- ❖ மின்னாற்பகுப்பு தூய்மையான ஆற்றல் பயன்பாடுகளுக்கு மிக முக்கியமானதாகும்.
- ❖ ஹைட்ரஜன் உற்பத்திக்கான நீர் பிரிப்பு மற்றும் ஹைட்ரஜன் பெராக்சைடு போன்ற வேதிப்பொருட்களின் தொகுப்பு போன்றச் செயல்முறைகளில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.
- ❖ ஆராய்ச்சிக் குழுவானது உலோக-கரிம கட்டமைப்புகளுடன் (MOFs) இந்த செயல்முறை அமைப்பினைத் தொடங்கியது.
- ❖ இந்தப் பொருட்களானது வேதியியல் எதிர்வினைகளுக்கு ஏற்றவாறு நல்ல நுண்துளை அமைப்பைக் கொண்டுள்ளன ஆனால் அவை மின் கடத்துத் திறனைக் கொண்டிருக்க வில்லை.

# மாநிலச் செய்திகள்

## இமாச்சலப் பிரதேசம் - 'My Deed' NGDRS திட்டம்




- ❖ நிலப் பதிவை நவீனமயமாக்குவதற்காக இமாச்சலப் பிரதேச மாநில அரசானது 'My Deed' NGDRS (தேசியப் பொது ஆவணப் பதிவு முறை) என்ற முன்னெடுப்புத் திட்டத்தைத் தொடங்கியது.
- ❖ இந்த அமைப்பு ஆனது இயங்கலை மூலம் சொத்துப் பதிவை அனுமதிப்பதன் மூலம், குடிமக்கள் அதன் இறுதி நடவடிக்கைக்காக என்று ஒரு முறை மட்டுமே தாலுக்கா அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய வசதியை உருவாகியுள்ளது.
- ❖ பிலாஸ்பூர் சதார், டல்ஹவுசி, புந்தர் மற்றும் ராஜ்கர் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் 10 தாலுகாக்களில் இந்த முன்னெடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ முக்கிய எண்ணிம சீர்திருத்தங்களில் எளிமையான இந்தி மொழியில் புதிய ஜமாபந்தி வடிவ, இணைய வழி ரோஸ்னாம்சா வாக்யாதி (எண்ணிம பட்வாரி நாட்குறிப்பு) மற்றும் கார்குசாரி (இயங்கலை பணி அறிக்கையிடல்) ஆகியவை அடங்கும்.
- ❖ கூட்டு நில உரிமையில் உள்ள சில சர்ச்சைகளைக் குறைக்க 'ஒற்றை கட்டா, ஒற்றை உரிமையாளர்' மாதிரியைச் செயல்படுத்தி, 'காங்கி தக்சீம்' என்ற திட்டத்தை குறுகிய கால அடிப்படையில் செயல்படுத்த மாநில அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

## பஞ்சாப் - புதிய புனித நூல்கள் அவமதிப்பிற்கு எதிரான மசோதா

- பஞ்சாப் அரசு ஆனது, 2025 ஆம் ஆண்டு புனித நூல்களை மதிக்காமல் அவற்றிற்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் மசோதாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மத நல்லிணக்கத்தைப் பாதுகாக்க புனித நூல்களுக்கு எதிரான அவமதிப்புகளை இந்த மசோதா குற்றமாக்குகிறது.
- இது ஸ்ரீ குரு கிரந்த் சாஹிப், ஸ்ரீமத் பகவத் கீதை, குர்ஆன் ஷெரீஃப் மற்றும் புனித வேதாகமம் உள்ளிட்ட பல நூல்களுடன் தொடர்புடைய பல்வேறு புனித நூல்களை உள்ளடக்கியது.
- இந்த மசோதாவானது, இந்தக் குற்றங்களுக்கு குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் முதல் ஆயுள் வரை சிறைத் தண்டனையும் மற்றும் 5 லட்சம் முதல் 10 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப் பரிந்துரைக்கிறது.
- புனிதப் படைப்புகளை அவமதிக்க முயற்சிப்பதற்கு என 3 முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் 3 லட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும்.
- அத்தகைய நடவடிக்கைக்கு தூண்டுதலாக இருத்தலும் தண்டனைக்குரியது.
- பஞ்சாப் அரசு இந்த மசோதாவை வரைவதற்கு முன்பு மத்திய சட்ட அமைச்சகத்திடம் இது பற்றி கலந்தாலோசிக்கவில்லை.




## மிசோராமை நோக்கி வரும் சின் அகதிகள்

- சின் கிளர்ச்சியாளர் குழுக்களுக்கு இடையேயான பல வன்முறை மோதல்களைத் தொடர்ந்து மியான்மரின் சின் மாகாணத்தினைச் சேர்ந்த சுமார் 4,000க்கும் மேற்பட்ட அகதிகள் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மிசோராம் மாநிலத்தின் சாம்பாய் மாவட்டத்திற்குள் நுழைந்தனர்.
- சின்கள் இந்தியாவில் உள்ள மிசோக்களுடன் தொடர்புடைய ஒரு இனக்குழுவாகும்.
- அவர்களில் பலர் மியான்மரின் இராணுவத்தினை எதிர்த்துப் போராடும் இராணுவ எதிர்ப்புக் குழுக்களின் ஒரு பகுதியாக உள்ளனர்.
- மிசோராமின் மிசோ மக்கள் சின்களுடன் வலுவான உறவுகளைக் கொண்டுள்ளனர், ஆனால் எல்லைகளில் அனைத்து இயக்கமும் 2024 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது.
- மிசோரம் தங்குமிடம் மற்றும் உதவியை வழங்கினாலும், வள நெருக்கடியினை எதிர்

கொள்கிறது மற்றும் அங்கு குடிமக்கள் அல்லாதவர்களைப் பதிவு செய்யவும் அனுமதி கோருகிறது.




## பெஹ்தீன்க்லாம் திருவிழா 2025




- மேகாலயாவின் ஜோவாயில் ப்னார் சமூகத்தின் கலாச்சாரப் பாரம்பரியத்தை மிகவும் பிரதிபலிக்கின்ற பெஹ்தீன்க்லாம் திருவிழா கொண்டாடப்பட்டது.
- "பெஹ்தீன்க்லாம்" என்ற ஒரு சொல்லின் பொருள், ஆன்மீகத் தூய்மை மற்றும் சமூக வலிமையைக் குறிக்கின்ற "துன்பங்களை விரட்டுதல்" என்பதாகும்.
- மேற்கு ஜெயிந்தியா மலைகள் முழுவதும் நடைபெறும் இந்தக் கொண்டாட்டங்களில் , வண்ணமயமான ஊர்வலங்கள் மற்றும் ரோட்ஸ் எனப்படும் உயரமான அலங்காரக் கட்டமைப்புகளின் ஊர்வலங்கள் அடங்கும்.

## இந்தியாவின் முதல் நீர்சார் தொழில்நுட்பப் பூங்கா

- அசாம் மாநில முதல்வர் கௌஹாத்திக்கு அருகிலுள்ள சோனாப்பூரில் நாட்டின் முதல் நீர் சார் தொழில்நுட்பப் பூங்காவைத் திறந்து வைத்தார்.
- அசாமில் பல ஆறுகள் இருந்தாலும், அதன் மீன் வளத் தேவையைப் பூர்த்தி செய்ய என ஆந்திரப் பிரதேசம் போன்று பிற மாநிலங்களையே இன்றும் சார்ந்துள்ளது.
- அசாம் மாநிலம் அதன் மீன் உற்பத்தியை சுமார் 4.99 லட்சம் மெட்ரிக் டன்களாக இரட்டிப்பாக்கி, இந்தியாவில் நான்காவது பெரிய மீன் உற்பத்தி செய்யும் மாநிலமாக மாறியது.
- ஆந்திரப் பிரதேச மாநிலம் ஆனது இந்தியாவில் மிகப்பெரிய மீன் உற்பத்தி செய்யும் மாநிலமாக உருவெடுத்தது.
- 2024 ஆம் ஆண்டில், மீன் உற்பத்தியில் ஆந்திரப் பிரதேசத்தைத் தொடர்ந்து மேற்கு வங்காளம், குஜராத் மற்றும் கேரளா ஆகியவை இடம் பெற்றுள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★